மகரந்தன்



ண்குதிரை

காவ்யா

T
891.481 41
G 15 M
41
G 15 M

மண் குதிரை

மகரந்தன்

காவ்யா

First Edition: Dec. 1995

MAN KUTHIRAI

A Collection of Poems

© I. Ganapathy

Wrapper Design: Ma. Se.

Inside Drawings: Veera Santhanam

Published by:

Lakshmi Sundaram
Kaavya
16, 17th E Cross
Indira Nagar II Stage
Bangalore - 560 038.

Price: Rs. 18-00

89985
15-7-98

Library IIAS, Shimla
T 891.481 41 G 15 M
00089985

Printed at:

Sabanayagam Printers
73-A, East Car Street
Chidambaram - 608 001.

இது மகரந்தனின் மாயக்குதிரை

பிரபஞ்சன்

...**எ**ன்றாலும், நம்பி இதற்குள் நான் இறங்கினேன். நான் ஏமாற்றப்படவில்லை என்பதும் உண்மை. புதுச்சேரி மண் தமிழுலகுக்கு அளித்திருக்கும் மேலும் ஒரு நல்ல பங்களிப்பாக மகரந்தனின் கவிதைகள் எதிர்காலத்தில் கணக்கு வைக்கப்படும்.

தமிழில் நிறையவே, கவிஞர்கள் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள் என்று நம்பிக்கையுடனேயோ, அல்லது குற்றச் சாட்டு போலேயும், ஒரு கருத்து உரைக்கப்படுவதை தமிழ் ஆர்வலர் அறிவர். எனினும், இது ஒரு பிழை அன்று. தமிழ் போன்ற ஒரு மொழியில் கொஞ்சம் தோய்ந்தவரேயானாலும், கவிதையோ அல்லது கவிதை போன்ற ஒன்றையோ எழுதிப் பார்க்க முயல்வது இயற்கையே ஆகும். தமிழில் ஊன்றுபவர், கவிதை எழுதாமல் இருப்பதுவே என்னைப் பொருத்தவரை ஆச்சர்யம். இந்த மொழியின் தன்மை இது!

பாமரர் என்று [மிகவும்' படிப்பாளிகள் போன்று நம்மால்] உரைக்கப்படும் மக்கள் கவிதையையே நோக்குங்கள். ஒரு கவிதை. தன்னிடம் சுகித்து இருந்து விட்டு, குழந்தை பிறந்ததும் கட்டுடல் தளர்ந்ததும், ஓடிப் போன காதலன் குறித்து பெண் ஒருத்தி பாடுவதாக அமைந்த கவிதை இது.

> ''கச்சிருக்கும் போது கரும்பானேன்
> கைக் குழந்தை—
> வச்சிருக்கும் போது வேம்பானேன்''

இந்தக் கவிதையைக் கவனம் செய்த, அந்தக் கிராமத்துக் கவிஞனின் முகவிலாசம் தெரியவில்லை தான். தமிழில் எத்தனையோ குட்டைக் கவிகளுக்கெல்லாம் கல்வெட்டு மாதிரி விலாசம் இருக்கையில், நல்ல கவிஞனின் பெயர்கூட நமக்குத் தெரியவில்லை பாருங்கள். இந்தக் கவிதையின் சொல் சிக்கனம், காட்சிவிவரம், தேர்ந்தெடுத்த உருவகம், இயல்பான எதுகை, முழுமையான மோனை எல்லாம் பேனாவின் மூடி மாதிரி பொருந்தி வருவதை நோக்குங்கள். இந்தக் கவி, செய்யுளியல் படித்து இதைச் செய்திருப்பாளா? காரிகை கற்று இந்தக் கவியைச் சொல்லி இருப்பாளா என்றால் இல்லை. இந்தத் தமிழ் மொழியின் தன்மையே இது. தமிழ் - கவிஞர்களை உருவாக்குகிற மொழி!

இன்றைய தேதியில், தமிழில் 150 கவி அரசர்கள், 129 கவிசக்ரவர்த்திகள், 248 கவிவேந்தர்கள் இருப்பதாக ஒரு 'துணுக்கு'ச் செய்தி உரைக்கிறது. இதன் 'உண்மை' எனக்குத் தெரியாது. ஆனால், கவிப் பெருக்கம் மேவி இருக்கிறது என்பது உண்மை. இதன் அடிப்படைக் காரணம், நான் மேலே குறிப்பிட்ட அகக் காரணம்தான். இதுவும் அன்றி, இன்னொரு புறக் காரணமும் கூட உண்டு. பெருகி இருக்கும் பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி, போன்ற சாதனங்களும் கவிப்பெருக்கத்துக்குக் காரணங்கள்.

என்னைப் பொருத்தவரை இது தவறு இல்லை. வரட்டும். எந்த வெள்ளத்தையும் எவரும் தடுத்து அணை போட முடியாது. கவி வெள்ளத்துக்கும் கூட! பல நூறாண்டு சங்கம் இருந்ததாகச் சொல்லப்படுவதுண்டு. இருந்தும், சங்க இலக்கியம் என்பது வெறும் பதினெட்டு தானே! மற்றவை எங்கே? காலம், அவைகளைப் புறக்கணித்துவிட்டது என்பதே பொருள்.

காலம், ஒரு துலாக்கோலைக் கையில் வைத்துக் கொண்டிருக்கிறது நிர்தாட்சண்யமாக, படைப்புகள் அங்கு

நிறுத்தப்படுகின்றன. டார்வினின் கூற்றுப்படி, "தக்கது நிலைத்தது."

மகரந்தன் கவிதைகள், இன்குலாப், அப்துல்ரகுமான், மேத்தா மற்றும் பல நவீன கவிஞர்களின் தாக்கம் கொண்டவை. இதை ஒரு குறையாக நான் சொல்லவில்லை. தொடக்கம் இப்படித்தான் அமையும். காலம் செல்லச் செல்ல மகரந்தனின் கவி ஆளுமையும், மொழி ஆளுமையும், சமூகத் தத்துவக் கண்ணோட்டமும், கூர்மை அடைய அடைய கவி வெளிப்பாட்டு முறையும் மாறும். வளரும், செழுமை உறும். பிறகு தனித்துவம் லபிக்கும். அப்படி லபிக்கும் என்கிற நம்பிக்கையை ஊட்டுகின்றன மகரந்தனின் சில கவிதைகள், சில வரிகள்.

"தவளைச் கூச்சல்" என்ற தலைப்பில் ஒரு கவிதை. எனக்கு இது மிகவும் பிடித்திருந்தது. ஒரு பெண்ணின் பார்வையில் அமைந்த கவிதை இது. பார்வை, சொல் முறை, சிக்கனம், தொனி எல்லா வகையிலும் ஒன்றாக வந்திருக்கிற கவிதை இது.

இராமனுக்காய்த் தவமிருந்தேன்
பலனில்லை.
அவன் தம்பியாவது?
அதற்கும் வழியில்லை.
சரி!
வேறு எவனாவது?
... ...
பொறுத்துப் பார்த்தேன்
வேறு வழி தெரியவில்லை.
பக்கத்து வீட்டு
இராவணனைக் கடத்தி விட்டேன்.
அங்கே என்ன
தவளைக் கூச்சல்
என் கற்பைப் பற்றி!

—இக் கவிதைக்கு மகரந்தன் வைத்திருக்கிற பெயர் "தவளைக் கூச்சல்" என்பதாகும். மிகுந்த அர்த்தமும், நியாயமும் நிறைந்த தலைப்பு. பெண்ணின் உடம்பைக் காப்பாற்ற, ஆண்கள் இனம் படும் அவஸ்தை, சுவாரஸ்ய மான மனுஷ நாடகம் இல்லையா? உடம்பின் "தூய்மையை", காப்பாற்றத் துடிக்கும் நவீன ராமர்களின் மேல் கவிஞர் செலுத்தி இருக்கும் நையாண்டியும் அங்கதமும் ரசிக்கும்படியாக இருக்கிறது, அல்லவா? இரண்டாயிரம் வருஷத்து நம் பார்வையை, தமிழ்க் கவிதைகளின் பார்வையை, "கண்ணகிப் படிமத்தைத்" தோலுரிக்கிறது, இல்லையா?

'ஒரே கேள்வி' என்கிற தலைப்பில் ஒரு கவிதை.

உலகம்
ஒரு நாடகமேடை
என்றதற்காகவா
நிரந்தர
நடிகர்களாகிப் போனீர்?

யார் அந்த நடிகர்கள்? நம் மனதில், நம் சமகால அரசியல் (வி) வாதிகள் தோன்றுகிறார்கள் தானே? நம் அரசியல், சமூக, பொருளாதார, ஆன்மீகத் தளங்களில் பிரமுகர்களாகக் கோலோட்சுக் கொண்டிருக்கும் அத்தனை 'பிளேக்' கிருமிகளும் தோன்றுகின்றன அல்லவா? கடை களில் மின்னி, தையல்காரரால் செழுமையாகி, நம் உடம்புக்குச் சிறப்பு தந்து, நம்மால் பாதுகாக்கப்பட்டு, பின் கிழிந்து, சுருட்டிக் கரித்துணியாகி, குப்பையில் கிடக்கும் "ஒரு காலத்து உசந்த துணி" மாதிரி, இன்று தூக்கி எறியப் படவேண்டிய பிரமுகர்கள் பலரும் தோன்றுகிறார்கள், அல்லவா வரிசை வரிசையாக! இந்தத் தோற்றுவித்தலைக் கவிதைச் செய்திருக்கிறதே. அதுவே சிறப்பல்லவா?

1992, டிசம்பர் 6-ம் தேதி நடைபெற்ற, இந்தியாவின், இந்திய அரசின், இந்திய அரசியலின், இந்திய மதக்கலவரக் காரர்களின் மாபெரும் வன்முறையான பாபர் மசூதி இடிப்பை இவர் பதிவு செய்திருக்கிற வகைமை:

"...... ....
....
ஓங்கி உதறிய போது
வந்து விழுந்தது
வண்ணான் குறியாய்
ஒரு கறை
இனி என்ன செய்து
என்ன பயன்
மறைந்து போகுமா
அந்த அயோக்கியக் கறை."

கவிஞர் என்றால் காதலிக்காமல் இருந்தால் எப்படி? அதுவும் இளைஞர். நிறையவே, சுமார் 14-பக்க அளவில் காதலித்து இருக்கிறார்.

உனக்கென்ன
நீ போய்விட்டாய்
ஓர் அற்புதத்தை
என்னுள் நிகழ்த்திவிட்டு.
நானல்லவா...
வீழ்ந்து கொண்டிருக்கிறேன்
பைசா நகரத்து
கோபுரம் மாதிரி.

என்பது போன்ற ரசிக்கும்படியான பல வரிகள் இருக்கவே செய்கின்றன.

'ஒன்றிரண்டு உருவங்களைப் பற்றி சொல்ல வேண்டி இருக்கிறது. "நாம்கள்" என்கிற கவிதை இது.

மலட்டு நளனுக்கு
மாலையிட்டு விட்டு
அரசைச் சுற்றும்
குருட்டுத் தமயந்திகள்

மக்கள் தங்கள் தலைமேல், தாங்களே கொள்ளி வைத்துக் கொள்வதை அயோக்கியர்களுக்கு அரியணைச் சுகம் தருவதைக் குறிப்பிடுவதை நாம் புரிந்துகொள்ள முடிகிறது. இது அழகிய உருவகமும் கூட. அரசு என்பது அரச மரமாகவும் அரசாங்கமும் ஆக [அரசு வேறு, அரசாங்கம் வேறு என்பது நமக்கே புரியும்] விரிந்து, அரசே மரமாகப் பரிமாணம் பெறும் சத்தான உருவகமும் கூட. எனினும், இது கவிஞர் அப்துல் ரகுமானால் முன்னரே பயன்படுத்தப் பட்டுவிட்டது. ரகுமான் சுயம்வரத்தின் முந்தைய நிலையைச் சொன்னார். மகரந்தன் சுயம்வரம் நடந்த பின் கடந்த 47-ஆண்டு அரசியலைச் சொல்கிறார். இது உருவகங்களின் தொடர் பரிணாமம் என்றும் சொல்லலாம். ராமன் பற்றிய கவிஞரின் புரிதல் எனக்கு மகிழ்ச்சி தருகிறது.

"நான் ராமனாக்கும்" என்று
பெருமிதத்தில் நெஞ்சு நிமிர்கிறேன்

"அப்படியென்றால்
எந்த வண்ணானின் பேச்சைக் கேட்டு
என்னைத் தீக்குளிக்கச்
செய்யப் போகிறாய்.
ஆண்மையை அடமானம் வைத்துவிட்டுப்
பேடிபோல் மறைந்திருந்து
எவனைக் கொல்லப் போகிறாய்" என்கிறாய்
திராவக வீச்சில்
அடிபட்டவள் போல்
ஆவேசம் கொள்கிறாய்."

ராமன், ஏதோ ஏகபத்தினி விரதன் என்றும், மாவீரன் என்கிற பிம்பமும் உடைபடுவதைக் காணமுடிகிறது. ராமன், பெண் கொலை புரிந்த பாதகன், மனைவியைச் சந்தேகித்த கோழை என்பதே சரியான அளவுகோல் ஆகும். மகரந்தனின் சமூக அக்கறையும் அறிவும் பிரகாசிக்கின்ற வரிகள் இவைகள்.

தான் வாழ்ந்த காலத்தின் ஆத்மாவாக இருப்பவன் கவிஞன். சகல அடக்குமுறைகளையும் எதிர்ப்பவன் கவிஞன். சகல அழகுகளையும் நேசிப்பவன் கவிஞன். மகரந்தன், இந்த அளவுகோல்களின்படி, கவிஞரே. தன் சமூக மனசாட்சியை நேர்மையாக, அழகாகக் கவிதாம்சத்தோடு பதிவு செய்து இருக்கிறார். இந்த கருத்தியல், அழகியல் இரண்டும் கைகோர்த்து வளர நிறைய இடம் இருக்கிறது, மகரந்தனின் கவிதைகளில். பெண்களின் கூந்தலில் இருக்கும் ஒற்றை ரோஜாவில் மட்டும் அழகைப் பார்க்கும் கவிஞர்கள் அல்லது அப்படி அழைக்கப் படுகிறவர்கள் புல புல என வெளிப்படும் காலம் இது. இந்த வக்ரமான சூழ்நிலையில், வெகு மக்களின் பக்கம் நின்று, அவர்களின் பிரதிநிதியாக, அவர்களின் பாடுகளைப் பாடவந்திருக்கும் மகரந்தனை, நாம் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். புதுவை மண், தமிழுலகுக்கு அளித்திருக்கிற செழுமையான புதிய வரவு-மகரந்தன்.

தோழமையுடன்

54, வ. உ. சி. வீதி
புதுவை - 1.

பிரபஞ்சன்

மண்குதிரை அல்ல . . .

முனைவர். க. பஞ்சாங்கம்

மகரந்தனின் 'மண்குதிரை' கையில் கிடைத்தது. அவரது விழிகள் எனக்குக் 'குளுமை'யாகத் தெரியும்; ஆனால் அவரது கவிதைகள் எனக்கு நெருப்பாய்த் தெரிகின்றன, சில இடங்களில் நெருப்பாக மாறுவதற்கு முயற்சி செய்கின்றன! நல்ல முயற்சி!

மனித இனம் முதுமையை நெருங்கி விட்டது என்று ஒப்பாரி வைக்கிறார்கள் மதவாதிகள்; அழித்தே பிழைத்துக் கொண்டிருக்கும் மேற்க்த்திய நாகரீகத்தில் உருவான அறிவியல் அறிஞர்கள் என அடையாளப் படுத்தப்படும் சிலரும் கூட அப்படித்தான் உலகம் அழியப் போகிறது எனப் பயமுறுத்துகிறார்கள். ஆனால் இனிமையாக, வசீகரமாக, கனவுகளும் கற்பனைகளும் நிறைந்ததாக, அறிய அறிய அறியாமை நிறைந்ததாக, தேடல் வேகம் மிக்கதாக, இளம் ரத்தத்திற்கே உரிய துடிதுடிப்பு மிக்கதாக வாழ்க்கை என்றைக்கும் போலத்தான் ஓடிக் கொண்டிருக்கிறது என்பதற்குச் சாட்சியாக நிற்கிறது மகரந்தனின் மண் குதிரை! எல்லாக் கவிஞர்களையும் போலக் "காதலில் தான்" கவிதையைக் கண்டெடுத்திருக்கிறார். ஆனால் அந்த ஒன்றிலே தேங்கி விடாமல், தன்னைச் சுற்றியிருக்கும் சமூகத்தையும் பார்க்கத் தொடங்கியிருக்கும் தன்மை, அவரைக் கவிஞராக அடையாளப்படுத்துகிறது-

வாழ்வில் எத்துணையோ விதமாக, உதிரிகளாக வந்து சேரும் வாழ்க்கை அனுபவங்களைப் "படைப்பு" என்கிற

பெரிய 'வான வெளியில்' வார்த்தைகளாக உருட்டிவிடத் தெரிந்திருக்கிறது மகரந்தனுக்கு. அதனால்தான் அவரால்,

'மூளையில் இருந்து
முள் முளைக்கிறது'

என்றும்,

காலை வைக்க முடியாதபடி
அவலங்கள்

என்றும்,

ஈக்களும்
புழுக்களுமாய்
என்னைச் சுற்றிலும்
மலங்கள்

என்றும்,

ஒருவனை
வெட்டிக் சாய்த்த பிணத்தில்
வேறொருவன்
வேர் விடுகிறான்

என்றும் எழுத முடிகிறது. கவிதை என்பது அனுபவம் மட்டுமல்ல; சரியான 'வினைச்'சொல்லைச் சரியான இடத்தில் பொருத்துவதுதான். அந்த வித்தை தெரிந்திருக்கிறது மகரந்தனுக்கு. தேவகுமாரன் மனிதர்களைப் பிடிக்கும் கலையைத் தெரிந்து வைத்திருந்தது போல, மகரந்தன் வார்த்தைகளைப் பிடித்துப் போடும் கலையை நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறார். "வார்த்தைதான் கவிதை" என்ற சுமுக்கத்தைக் கவிஞர் நன்றாக உணர்ந்து கொண்டுள்ளார்; படைப்பில் வெற்றி பெறுகிறார். "தேவன் வார்த்தையாக இருக்கிறான்" என்பதன் பொருள் இதுதான்.

புவிப்பரப்பில் பலவிதமான சாத்தியக் கூறுகள் குவிந்து கிடக்கின்றன. ஆனால் தனி மனிதன் ஒவ்வொருத்தனும்

அவனவனுக்குரிய உளவியல் தன்மைக்கு ஏற்பச் சிலவற்றைத் தான் அனுபவமாகப் பார்க்கத் தெரிந்து கொள்ளுகிறான். அப்படித்தான் ஒவ்வொருத்தன் வாழ்வும் மிகக் குறுகலான ஒன்றாகச் சுருங்கி விடுகிறது. "அப்படிச் சுருங்க மாட்டேன்; என் எல்லையை விரித்துக் கொண்டே இருப்பேன்; என் சிறகு பறந்து கொண்டே இருக்கும்; எனது வானம் எல்லை அற்றது" என்று தன் இயக்கத்தை அடைத்துக் கொள்பவன் மாபெரும் கவிஞனாகிறான். மகரந்தன் அத்தகைய சிறகு களைப் பெற்றிருக்கிறார். இந்தக் கவிதைத் தொகுப்பிலுள்ள வார்த்தைகள் ஒவ்வொன்றில் இருந்தும் ஓராயிரம் சிறகு களை வாசகர் பெறுவது போலவே, அவரும் பெறுவார். ஒரு படைப்பாளிக்கு 'வெளியீடு' என்பது சிறகுகள் முளைப்பது என்று பொருள்.

நூற்றுக்கணக்கான கிலோமீட்டர் ஓடப் போகிற ஓட்டப்பந்தய வீரன் ஒருவன், 'ஒரு அடி' என்கிற அளவில் தான் தன் ஓட்டத்தைத் தொடங்குகிறான்; மகரந்தனும் அப்படித்தான் தொடங்குகிறார். ஒரு ஆலமரத்து விதைக்குத் தெரியுமா, தனக்குள் இவ்வளவு பெரிய மரம் இருக்கிறது என்று! மகரந்தனும் அத்தகைய ஒருவர் தான். கலை இலக்கிய உலகில் அவர் வெற்றி பெறுவார். வாழ்த்துகிறேன்.

பெருகும் அன்புடன்

முனைவர். க. பஞ்சாங்கம்

காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையம்

புதுவை.

பதிப்புரை

மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கக் கூடாது என்பார்கள். ஆனால் இதை நம்பலாம். காரணம் இம்'மண் குதிரை' மகரந்தனின் மனக்குதிரை. இது ஆகாய வீதிகளில் பறக்கவும் செய்யும் மாயக்குதிரை.

தமிழ்க் கவிதை வானில் இவர் ஒரு புதிய நட்சத்திரம். வழக்கம்போல காவ்யா இவரையும் அறிமுகப்படுத்துகிறது.

சமூகப் பிரக்ஞையும் சாதிக்க வேண்டும் என்ற ஆர்வம் கொண்ட இளைஞர் இவர். புதுவை, கவிஞர்களுக்கான களமே. பிரபஞ்சனின் முன்னுரை இந்நூலுக்கு களம் சேர்க்கும்.

தமிழ் எம்.ஏ., இலக்கியமும், மொழியியலும் படித்தவர். தற்போது புதுச்சேரி வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளராகவும், பத்திரிகையாளராகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இவர் வலம் வர வேண்டிய உலகங்கள் விரிந்து கிடக்கின்றன. இவருக்கு முன், இவரது கவிதைகள் பயணத்துக்கு நல்ல வாகனங்கள் ஆகும். பயணம் தொடர்க.

அன்புடன்

காவ்யா சண்முகசுந்தரம்

பெங்களூர்.

நன்றியோடு...

மகரந்தன்

ஏறக்குறைய மூன்று வருடங்களுக்கு முன்பே வந்திருக்க வேண்டிய தொகுப்பு இது. பல காரணங்களால் தள்ளிக் கொண்டே வந்து, இப்பொழுது உங்கள் கைகளில். தாமதமாய் வந்தாலும் நிறைவாய் வந்திருப்பதில் சந்தோஷம். இங்கு புதிதாய் எதையும் நான் சொல்லிவிட வில்லை. எனினும், சமூக நிகழ்வுகளில் என்னை பாதித் தவைகளை, சமூக அக்கறையோடு, மனசாட்சியோடு, பதிவு செய்திருப்பதாகக் கருதுகிறேன்.

''புறத்திணை
சுயம்வர மண்டபத்தில்
போலி நலன்களின் கூட்டம்
கையில் மாலையுடன்
குருட்டுத் தமயந்திகள்''

கவிஞர் அப்துல் ரகுமானின் இந்த கவிதையைப் படிக்கும் போதெல்லாம்; நல்ல கவிதை ஒன்று முழுமை பெறாமல் நிற்பதாகவே எனக்கு தோன்றியது, இதன் விளைவே ''நாம்கள்'' கவிதை. மற்றபடி சுவாரஸ்யமான கவிதைகள் என்று நீங்கள் நினைப்பதெல்லாம் என்னை எழுதிப் பார்த்த கவிதைகளே.

ஒரு படைப்பாளிக்கு வெளியீடு என்பது எவ்வளவு சிரமமான ஒன்று என்பது நீங்கள் அறிந்தது தானே. காவ்யா சண்முகசுந்தரம் உதவி இன்றி இந்நூல் வெளிவந்திருக்க முடியாது. அவருக்கு நான் என்றும் கடமைப்பட்டவன்.

இந்த தம்பிமீது மாறாத அன்பு கொண்டு அணிந்துரை வழங்கிய 'அண்ணாச்சி', பிரபஞ்சன் அவர்களுக்கும்; வாழ்த்துரை வழங்கிய முனைவர் க. பஞ்சாங்கம் அவர்களுக்கும் கூட.

கவிதைகளைத் தொகுத்துக் கொடுத்து, கருத்துகளை வழங்கி, என்னை நெறிப்படுத்திய சகோதரர், முனைவர் சுந்தர. ஆவுடையப்பன் (நிகழ்ச்சி நிர்வாகி, சென்னை வானொலி நிலையம்) அவர்களுக்கும், புதுச்சேரி வானொலி நிலைய நிகழ்ச்சி நிர்வாகி, முனைவர். பழ. அதியமான் அவர்களுக்கும்; ஓவியர்கள், மணியம் செல்வம், வீரசந்தானம் ஆகியோருக்கும்; அமுதசுரபி, வாரமலர் – தினமலர், வண்ணக் கதிர் – தீக்கதிர், செம்மலர் ஆகிய பத்திரிகைகளுக்கும்; சபாநாயகம் அச்சக ஊழியர்கள் அனைவருக்கும்; இன்னும் விடுபட்டுப் போன அனைவருக்கும் என் நன்றி என்றும் உரியது.

மகரந்தன்
புதுவை - 4.

காணிக்கை

ஆலமரம் தழைத்தாலும்
விழுது
வேர்களை நோக்கித்தானே!
என்னைச் சுமந்த கருவறைக்கு
இந்தக் காணிக்கை.

நம்பிக்கை முளை

அவர்களென்னவோ
அதை
வீழ்த்தும் நோக்கத்தோடு தான்
வெட்டினார்கள்.
அடுத்த நாள்
பார்த்தேன்
அதிலிருந்து ஒரு துளிர்
இப்போது
என் மனத்திலும் கூட.

○ ○ ○

ஜீவிதம்

அடர்ந்த காட்டில்
தனித்த மூங்கில்
கனவுகள் உறிஞ்சி
காற்றில் கிளை பரப்பிக்
கீதம் இசைத்த
சிறுகுழல் யான்.

எவர் எவரிடமோ வசப்பட்டுக்
காலக் கைகளால்
துளைபட்டு
யார் யார் செவிக்கோ
உணவாகும் என் கீதம்
எனக்கில்லை.

○

ஜனநாயகம்

வற்றிய முலை பற்றிப்
பாலுக்கழும்
குழந்தை.

முகத்தில் கவலைச்
சாயம் பூசிக்
கன்னத்து மேட்டில்
கையைத் தேக்கிப்
பொய்யாய் உலகம்
உன்னைப்
பார்க்கும்.

○

நாம்கள்

மலட்டு நளனுக்கு
மாலையிட்டு விட்டு
அரசைச் சுற்றும்
குருட்டு தமயந்திகள்.

○

அந்திப்புரம்

காமத் தினவெடுத்த
காதற் சூரியன்
அந்தியை அணைக்கும்
ஆர்வ வெறியில்....

மஞ்சள் குளித்த
அந்தியின் முகத்திலோ
நாணத்தின் ரேகைகள்.

○

89985

○

வார்த்தைப்
பட்டாசுகள்
வெடித்துத் தீர்ந்தன!

ஓ...
குப்பைக்
கூளங்கள்

○

அத்தி

மாற்றான் தோட்டத்தில்
பிடுங்கி நடப்பட்டது
உன் இதயம்.

பண்பாடு மாறாமல்
காய்த்துக் குலுங்குகின்றாய்.

உன்
ஆழ்மன
வேர்கள் மட்டும்
இன்னமும் என்னை
விசாரித்தபடியே.

○

குப்பை வண்டி

குப்பை வண்டிக்குள்ளும்
எவ்வளவோ குப்பைகள்.

வலியச் சென்று
பிறர் குப்பையை
வாங்கிக் கொண்டது.

பிறர்
வலிய வந்து
கொட்டிவிட்டுச் சென்றனர்.

‘சுமை கனத்தது’
குப்பை வண்டி
தள்ளாடியது.
கொடுத்தவரும்
கொட்டிவிட்டுச் சென்றவரும்
சுமக்க வேண்டியது
நீதான் என்று
தள்ளிவிட்டுச் சென்றனர்.

பாவம்
தள்ளாடித் தள்ளாடி
நடந்து கொண்டிருக்கிறது
மனித வண்டி.

○

புதிய கீதை

யுத்த உலகத்தில்
நான் மட்டும்
நிராயுதபாணியாய்
என்று
அடிக்கடி புலம்பாதே
தோழா!

புத்தி உனக்குக்
கூர்வாள்
வாயும் கையுமே
கேடயம்.

முன்னேறு...முன்னேறு...
உன் பங்கிற்கு.

○ ○

○ அப்பாவுக்கு ○

அப்பா...
அன்புள்ள அப்பா...
எனக்குப்
படித்தவன் பண்பாளன்
வேண்டும்தான்
அதற்காகப்
பணங்கொத்திக்
கழுகைக்
கொண்டு வராதீர்.

அழகான
கண் நிறைந்த
கணவன்
வேண்டும்தான்
அதற்காக
அகத் தொழுநோயாளியைக்
கொண்டு வராதீர்.

வரதட்சணையே
வேண்டாதவன்
நல்லவன்தான்
அதற்காகக்
காமுகனை
அழைத்து வரா்தீர்.

எனக்காகக்
கவலை கொள்ளாதீர்கள் அப்பா...
இந்தக்
குரோட்டன்ஸைப் பாருங்கள்
சூரிய ஒளியைத்
தவிர்த்து வாழ்வதை.

○

முரண்

நானும்
என் நண்பனும்
நட்சத்திர மிட்டாய்
சுவைத்தபடி
அவன் வீடு நோக்கி...
வறுமை மறைக்கும்

கதவைத் திறந்தால்
தரையெங்கும்
அதே
நட்சத்திர மிட்டாய்கள்
சுவைக்க முடியாதபடி

○

செக்குமாடுகள்

புதிதாய் எதையும்
எழுதவே இல்லை.

ஆயினும்
எழுதி எழுதியே
தீர்ந்துபோனது
மைக்குச்சி.

சுற்றத்தார் கூடி
'உச்' கொட்டி
பழம்பெருமையில்
தூக்கிப்போட்டனர்.

கடைசியில்
வேறொன்றை எடுத்து
நிரப்பிக் கொண்டனர்
அதுவும் ஒருநாள்...

○

தேதிக் காலண்டராய்த்
தினம்
அவர்களைக்
கிழித்துப் போடுகிறது
வறுமை

○

தவளைக் கூச்சல்

இராமனுக்காய்த் தவமிருந்தேன்
பலனில்லை.
அவன் தம்பியாவது?
அதற்கும் வழியில்லை.

சரி
வேறு எவனாவது?
... ...

பொறுத்துப் பார்த்தேன்
வேறு வழி தெரியவில்லை
பக்கத்து வீட்டு
இராவணனைக் கடத்திவிட்டேன்.

அங்கே என்ன
தவளைக் கூச்சல்
என் கற்பைப் பற்றி.

○ ○ ○



கொடிக்கம்பம்

கொடிக் கம்பம் நான்
உங்களிடம்
ஒரே ஒரு கேள்வி.

யார் யார் கொடியோ
உயரப் பறக்கக்
கொடிக் கம்பம் ஆனவர்களே
உங்கள் கொடியை
எப்போது
பறக்கவிடப் போகிறீர்கள்?

○

மண் குதிரை

வர்ண ஜொலிப்பு
வாண வேடிக்கைகளோடு
பிரதிஷ்டை செய்யப்பட்டது
மண்குதிரை

இது—
காவல் தெய்வங்களின்
புறப்பாட்டிற்கானது

இதன்மீது ஏறித்தான்
கூட்டணியில் தெய்வங்கள்
வேட்டைக்குப் போகும்
புலிகளை விடுத்து
எலிகளை வேட்டையாடும்.

வேட்டைப் பொருள்களாக
பத்மினிகளின் கற்போ;
அப்பாவிகளின் உயிரோ;
அபலைகளின் கண்ணீரோ;
சாபமோ கிடைக்கும்.

கடமையை மறந்த
காவல் தெய்வங்கள்
தங்களுக்குள் இட்டுக்கொள்ளும்
குடுமிச் சண்டையில்
குதிரையின் பாகங்கள்
உதிர்ந்த ரோமங்களாகும்.

தெய்வங்கள்
பதவி இழக்கும்.

மூடக் குயவர்கள்
மறுபடியும் ஒன்றுகூடி
குதிரை செய்வார்கள்.

O

மகரந்தன்



ஒரே கேள்வி

உலகம்
ஒரு
நாடக மேடை
என்றதற்காகவா
நிரந்தர
நடிகர்களாகிப் போனீர்!

○

டிசம்பர் 6, 1992

காலப் பேனா
எழுதிக் கொண்டிருந்தது
அவர்களின் கதையை.

யார் செய்த வினையோ
அன்றிக்
காலத்தின் விதியோ
பேனா சதி செய்தது.

ஓங்கி உதறியபோது
வந்து விழுந்தது
வண்ணான் குறியாய்
ஒரு கறை.
இனி என்ன செய்து
என்ன பயன்
மறைந்து போகுமா
அந்த அயோக்கியக் கறை.

மாமிசத் துப்பல்களுக்கு
இனி—
அந்தக் கறையே
அடையாளக் குறியாகும்.

○

"அவர்கள்"

- கண்ணகிகளே
  மாதவிகளாய்.
  மணிமேலைக்குப் பதில்
  மாதவிடாய்
  விளைச்சல்கள்.

- விளக்குகள் அணைய
  உணர்ச்சியில் எரியும்
  திரியில்லாத் தீபங்கள்.

சாவாரம்

முகவரியற்ற முகாந்திரத்தில்
முகம் தெரியாத மனிதர்களோடு
போர் புரிகின்றேன்.

போர் புரிந்த நானே
அவர்களின் மரணத்திற்காக
ஒப்பாரி
வைக்கின்றேன்.

ஏன்? ஏன்?
எனக்கு நானே
கேள்விக்குறியாய்
கனவுப் பாலைகளில்
அலைகின்றேன்.

சிசு—
அன்றேதான் பிறந்த
கண் திறவாத சிசு
கொலைவாட்களோடு
என்னைத் துரத்துகிறது.

முதுகுக்குப் பின்னால்
அந்த
அகங்காரச் சிரிப்பு
யாருடையது?

மண்டையோட்டைப்
பொத்துக் கொண்டு
மூளையில் இருந்து
முள் முளைக்கிறது
யார் யாரோ
அதில்
தங்கள் முள்ளுக்கும்
கூர் தீட்டிக் கொள்கிறார்கள்.

எவனோ ஒருவன்
என் மூளைமுள்ளைப்
பிடுங்கிக் கொண்டு
ஓடுகிறான்.

தூரத்தில்—
ஒருவனை
வெட்டிச் சாய்த்தப் பிணத்தில்
வேறொருவன்
வேர் விடுகின்றான்.

மனத்தில்
ஆயுதம் தாங்கி
வெள்ளைக் கொடியுடன்
மாநாட்டுக் கும்பலின்
ஊர்வலம்.
எதையுமே
கவனிக்காதது போல்
நான்.

ஈக்களும்
புழுக்களுமாய்
என்னைச் சுற்றிலும்
மலங்கள்.

காலைவைக்க முடியாதபடி
அவலங்கள்
அவற்றிலும்
அழகான மலர்கள்

இரண்டையுமே
மிதித்தப்படி
போய்க்கொண்டிருக்கும்
என் பின்னால்
நீள்கிறது
யார்யாரின்
நிஜங்களோ!

○

உளிகள்

எதிரி என்றா அவர்களை
விமர்சனம் செய்கின்றாய்.

அவர்கள் சிற்பிகள்.
எனவே செதுக்குகின்றனர்
வடிவம் பெறுகின்றாய்.

முழுமையானதும்
வடித்தவனே வணங்க வருவான்
ஏனெனில்
அப்போது நீ
தெய்வம்.

o

Poets build poems with words
In an orderly fashion
Not for display alone
But for registering
Contemporary acts in society

O! My love
I too register
Your every movement
Every day.

வார்த்தைகளைச் சரம்கோர்த்துப்
பார்வைகளின் ஸ்பரிசத்திற்குத்
தருவது மட்டுமா கவியின் வேலை

சமகால நிகழ்வுகளையும்
பதிவு செய்ய வேண்டும்.

ஆம்.
என் அன்பே!
நான் உன்னையும்
பதிவு செய்கின்றேன்.

இதயப் புத்தகத்தின்
எண்ணத்தாள்களைத்
திறந்து பார்க்கிறேன்
ஒவ்வோர் பக்கத்திலும்
வார்ப்படமாய்
வரிவடிவாய்
நீ...நீ...நீ...

மீள் பார்வை மீள் பார்வை மீள் பார்வை மீள் பார்வை

எனக்கு நினைவிருக்கிறது
அந்த நாளை
வேறு எந்த நாளை விடவும்.

உன் பார்வைக் குளோரோ புளோராகார்பன்
என் இதய ஓசோனைத்
துளைத்தெடுக்க
சூரியனின் புற ஊதாக் கதிர்பட்டு
வீழும் புல்லினமாய்
உன் காலடியிலேயே வீழ்ந்த...

அந்த நாளை
எனக்கு நினைவிருக்கிறது
வேறு எந்த நாளை விடவும்.

அந்த வெள்ளிக் கிழமையில்
நீ—
மஞ்சளாய் பூத்திருந்தாய்
மகரந்த வாசனையோடு.

அந்திவானம்
உன்னை
நகலெடுத்துத் தோற்றது.
எனக்குச் சந்தேகம்
மல்லிகை—
மஞ்சளாய் பூக்குமா?
அதிசயம்தான்.

உனக்கென்ன
நீ போய்விட்டாய்.
ஓர் அற்புதத்தை
என்னுள் நிகழ்த்திவிட்டு

நானல்லவா
வீழ்ந்துகொண்டிருக்கிறேன்.
பைசா நகரத்து
கோபுரம் மாதிரி.

வெறும் வாய் வார்த்தைகளால்
மக்களின் வாழ்க்கையைக்
கன்னமிடுபவர்களைவிடவும்
பெரிய கொள்கைக்காரிதான்
நீ!

ஓர் ஓரப்பார்வையில்
என் நிம்மதி முழுவதையும்
கொண்டு போய்விட்டாயே!

இருவரும்
தனிமையின் மடியில்
தவழ்ந்து கிடக்கின்றோம்
என்
கன்னத்தை வருடிய
மெல்லிய கிறக்கத்தில்
நான் கேட்கின்றேன்
‘‘என் மும்தாஜே
உனக்கான தாஜ்மகாலை
எங்கே கட்ட?’’

நீ சொல்கின்றாய்
‘‘தயவு செய்து
அவ்வாறு ஏதும்
செய்துவிடாதீர்.

அசுத்தக் காற்றால்
ஒளி மங்கிப் போகலாம்
நாலுபேர் பார்வையில்

நம்
காதலின் புனிதம்
அழிந்து போகலாம்.

தயவு செய்து
அவ்வாறு ஏதும்
செய்துவிடாதீர்.''

ஒருகணம்
முகில்
நிலவை மூடிக்கொண்டது
உன்னைப் போலவே.

மீள் பார்வை மீள் பார்வை மீள் பார்வை மீள் பார்வை

நினைவுகளின் அந்தரத்தில்
ஆடிக் கொண்டிருக்கிறேன்.
தென்றலோடு வருகிறாய்.
கடையிதழில் மல்லிகை விரிய
ரோஜா ஒன்றைப் பரிசளிக்கின்றாய்.

பரிசை முகர்ந்தவாறே
'மலர்களென்றால் எனக்கு
மிகவும் பிடிக்கும்.
மலரே அருகில் வா!' என்கிறேன்.
சட்டென உன் பார்வையில்
சந்தேக அரும்புகள் விரிவதைக்
கவனிக்கின்றேன்.

அவசர அவசரமாய்
மறுத்துத் தலையசைத்து
''நான் இராமனாக்கும்'' என்று
பெருமிதத்தில்
நெஞ்சு நிமிர்கின்றேன்.

'அப்படி யென்றால்
எந்த வண்ணானின் பேச்சைக் கேட்டு
என்னைத் தீக்குளிக்கச்
செய்யப் போகிறாய்,
ஆண்மையை அடமானம் வைத்துவிட்டுப்
பேடி போல் மறைந்திருந்து
எவனைக் கொல்லப்போகிறாய்'' என்கிறாய்.

திராவக வீச்சில் அடிபட்டவள்போல்
ஆவேசம் கொள்கிறாய்.

ஆளுங்கட்சி உறுப்பினர்களாலேயே
அவமானப்படும் சபாநாயகரைப் போல்

நான் நிலைகுலைந்து போகிறேன்.

என் இலக்கியப் பயிற்சி முழுவதும்
பாழாகிறது.

அது ஒரு புனிதப் பொழுது
சூரியன்
பொழுதின் மடியில்
தலை சாய்க்கிறான்
நான் உன் மடியில்
தலை வைத்திருக்கிறேன்.

வானம்
தேசத்தின் நெருக்கடி நிலையை
நினைவூட்டுகிறது.
“மழை வருமா?” என்கிறேன் நான்
‘சாரலே அடிக்கிறது’ என்கிறாய்
ஆம்!
உன் கண்களில் மின்னல்.

நிர்வாணத்தைக்
குடைகளாக்குகின்றோம்
நம்முள்
மழையடித்து ஓய்கிறது.

அந்த அந்திக்கும்
வெட்கம் போலும்
இருட்டு முக்காட்டை
இழுத்துப் போர்த்திக் கொள்கிறது.

அது ஒரு புனிதப் பொழுது.

மீள் பார்வை மீள் பார்வை மீள் பார்வை மீள் பார்வை

இருவருக்குமிடையே
ஒருவரும் இல்லை.

ஒருவரும் இல்லாததால்
ஒருவரானோம்.
ஒருவரானதாலேயே
வேறு வேறானோம்.

வேறு வேறானாலும்
நீ வேராய் இயங்குகிறாய்
நான் மலராய்
மணம் பரப்புகிறேன்
என் துயரங்களை.

தூரத்தில் நிற்கிறாய்
நான் சுற்றி வருகிறேன் பூமியாய்.

காலம் கணக்கெடுக்கிறது.

இரவும் பகலுமாய்
வாழ்க்கைக் சுழலுகிறது
வெறுமையாய்.

மானங்கள்
அவமானங்கள் என்று
வாழ்க்கையை அர்த்தப்படுத்தினாய்.
சரி!
எப்போது புனிதப்படுத்துவாய்?

இன்னொரு மகாமகம்
வரட்டும் என்று மட்டும் சொல்லிவிடாதே.

அதற்குள்,
உன் நினைவுகளின்
நெரிசலிலேயே மூச்சு முட்டிச்
செத்துப் போவேன்.

“தமிழ்நாட்டில்தான்
இலக்கியவாதிகள்
கோஷ்டி கானம் பாடுகிறார்கள்
மற்ற இடங்களில்
அப்படியா?”
அங்கலாய்க்கிறேன்.

“உங்களுக்குதான்
‘ஒத்து’ ஊதத் தெரியவில்லை
ஏன்—
அடுத்தவரை
குறை சொல்கிறீர்”
என்றாய்.

ஆமாம்—
எனக்குத்தான்
ஒத்து ஊதத் தெரியவில்லை
இல்லையென்றால்
உன்னை...

உள்ளம் ஒன்றைச்
சொல்ல விழைகிறது.

உதடு ஒன்றை உச்சரித்து விடுகிறது
உன் புத்தியைப் போலவே.

அடக்க முடியாத்
உணர்வுகளின் வெளிப்பாடாய்
எதையோ எழுதித் தீர்க்கிறேன்.

உனக்காக எழுதியதை
இவர்கள் கவிதை என்கிறார்கள்.

அடியே
எட்டியே நில்
இவர்களுக்குக் கவிதை கிடைக்கும்.

ஒருநாள்
என் வாழ்க்கை எழுதும்
மரணம் என்னும் கவிதைகூட
உனக்கானதாகவே இருக்கும்.

ஓர் இழையில்
ஆடிக்கொண்டிருக்கிறது
என் உயிர்
இந்தத் தேசத்தின்
எதிர்காலம் போலவே.

நீயோ—
ஏகாதியபத்தியத்தின் கைக்கூலியாகி
என் கண்ணீர் வரிகளை வசூலிக்க
இன்னமும் நான்
இறந்துபோகாமல் பார்த்துக்கொண்டே
உன் நினைவுச் சுமைகளை
முன்னைவிடவும்
அதிகமாகச் சுமத்துகின்றாய்
உலக வங்கி போல.

நானோ—
சொரணை இல்லாத இந்தியனாய்
முன்னைவிடவும் அதிகமாக
அடிமைப்பட்டுப் போகின்றேன்.

அடீ!—
என்றாவது ஒரு நாள்
என் தசை நார்கள்
இறுகும்
என்னுள்ளும்
புரட்சி வெடிக்கும்
அப்போது...

வாமனர்கள்

O

பலாக்காய் கனவில்
கலாக்காயை இழந்தன
வாய்க்கால் கொக்குகள்.

O

O

மலை முகடுகளுக்குமா
வெள்ளைச் சீலை?
ஓ... வெண்மேகம்!

O

O

தைத்த இடத்திலேயே
தன்னை கூர்தீட்டிக்கொள்ளும்
மோகமுள்.

O

O

இடுப்பில் இருக்கும்
துண்டு தோளில்
'இந்தியா'.

O

○

வேர் பிடிக்காமல்
கிளைகளைப் பரப்புகின்றன
மனித மரங்கள்.

○

○

சுறுசுறுப்பாய் போகின்றன
வேறு வேறு பாதை நோக்கி
வெட்டுக்கிளியும், எறும்பும்.

○

○

வளர்ந்த சுகத்தை
விழுதுகளிடம் விசாரித்தன
வேர்கள்.

○

கலைகளும் கரையான்களும்

காலச் சுவரில்
ஓர் இழையில்
ஆடிக் கொண்டிருக்கிறது அது.

அது—
கலப்படமற்ற கலைப்படம்
கலாச் சாரத்தின் சாளரம்.

முன்னோர் விட்டுச் சென்ற
பரம்பரைச் சொத்து.

நாற்புறமும் செல்லரித்து...இன்று
ஓர் இழையில்
ஆடிக் கொண்டிருக்கிறது
அது.

ஒருவன் சொன்னான்:
"விஞ்ஞான காலத்தில்
மாட்டு வண்டியா
எப்போது போய்ச் சேரப் போகிறோம்?

செல்லாக் காசுகளாகிவிட்ட
நாட்டுப்புறக் கலைகளைப்போல்
அதையும் தூக்கித் தூர எறி!

ஜன்னலைத் திற
புதிய காற்று
உன் வீட்டு முற்றத்தை
நிறைக்கட்டும்'' என்றான்.

பழசாகிப் போய்விட்டாள்
என்பதற்காக தாயைத் தூக்கி
தூர எறிந்துவிட முடியுமா?

கண்ணாடிச் சட்டத்திற்குள்
அந்தப் படத்தைப் பார்த்தேன்.
நாற்புறமும்
கரையான்கள் அரித்துக் கொண்டிருந்தன.

கண்ணாடியில்
என் பிம்பம்.

செல்லரித்தப் பகுதியாக
தோள் பகுதியும்
தலையும் தெரிந்தன.

நான் திடுக்கிட்டுப் போனேன்
கரையான்கள்
அரித்துக் கொண்டிருப்பது
கலையையா?
என்னையா அல்லது
என் பிரதிபலிப்பையா?

கலைகள்
வாழ்க்கையின் பிரதிபலிப்பு அல்லவா?
அப்படியென்றால்
கரையான்கள் தின்று கொண்டிருப்பது
என் வாழ்க்கையையா?

வெளிக்காற்றைச் சுவாசிக்கத்தான்
ஜன்னலைத் திறந்தோம்
வந்து விழுந்ததோ
விஷக் காற்று.

உப்புக் காற்றாய்
அதுவல்லவா
வாழ்க்கைக் கூறுகளை
அரிக்கத் தொடங்கியது.

எட்டு திக்கும் சென்று
கலைச் செல்வங்கள்
யாவையும் கொணர்ந்திங்கு
சேர்க்க வேண்டும் தான்
அதற்காக—
எய்ட்ஸ் பார்த்தீனியத்தையுமா
இறக்குமதி
செய்ய வேண்டும்?

புதியவற்றிற்கு
பூபாலம் இசைக்க வேண்டும்தான்
அதற்காக
பழமைக்கு
இரங்கற்பா பாட வேண்டுமா?

விதை பழையது தான்
ஆனால்
அதன் விளைச்சல்
புதியதல்லவா?

வியாபாரியான போது
கலைஞன் தோற்றுப் போய்விட்டான்
கலைகள்
செத்துப் போய்விட்டனவா?

என் முன்னோர்கள் விட்டுச்சென்ற
பரம்பரைச் சொத்தை
கரையான்களுக்குத்
தின்னக் கொடுப்பதா?

இந்தச் சொத்து
எனக்கு மட்டுமா சொந்தம்?
நீங்களும் இதன்
பங்காளிகளில்லையா?

குருட்டு இருட்டில்
மின்மினிகளுக்கும்
நட்சத்திர அந்தஸ்த்து
கொடுத்தது போதும்.
நம் வேர்களுக்கு நாமே
வெந்நீர் ஊற்றிக்கொண்டதும் போதும்.

இனி மேலாவது
வெண்சாமரம் வீசுவோம்.

○

[18.5.94 *அன்று புதுவையில் நடைபெற்ற பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா மற்றும் இளைஞர் விழாவில் வாசிக்கப்பட்டது.*]

தொலை தூரங்களுக்கு அப்பால்

கன்வேயர் பெல்டில்
கால்களின் ப்பயணம்
கம்ப்யூட்டர் தின்று
வளரும் மூளை.

காம்ப்பெக்ட் டிஸ்க்கில்
காதுகளின் மரணம்.

சேட்டிலைட் வாழ்க்கை
கண்களை விற்கும் கனவுகள்

மணல் குரல் நெருடி
'அப்பா' எனும்
உலோக மழலை
நாளை
எனக்காக அழலாம்
மனிதத்தைத் தேடி—
என் மரணத்தில்.

பார்வைகள்

பள்ளிக்குப் போகப் படியிறங்கினால்,
பள்ளிக்குத்தான் போகின்றேனா
என்ற
பக்கத்து வீட்டு மாமியின்
போலீஸ் பார்வை.

வீதியில் இறங்கி
நடக்க ஆரம்பித்தால்
காலிப் பயல்களின்
விசில் பார்வை.
வயோதிகனிடத்தில் கூட
வாலிபப் பார்வை.

வகுப்பறையில்
ஆசிரியரின்
கேள்விப் பார்வை.
சக மாணவர்களின்
கேலிப் பார்வை.

பஸ்ஸிற்கு நிற்கையில்
ரோமியோக்களின்
காதல் பார்வை.

பஸ்ஸிற்குள் எத்தனையோ
உரசல் பார்வை.
தனித்து நடந்தால்
தனியே அழைக்கும்
"சிகப்புப்" பார்வை.

வேட்டைக்குத்தப்பி
வீட்டுக்கு வந்தால்
என் புத்தகங்களில்
கடிதம் தேடும்
உன்னிடத்தில்
சந்தேகப் பார்வை.

நீயுமா அம்மா...

கனவுகள் கலைபட்டும்

அம்மா...
அன்று பாடிய தாலாட்டை
இன்றும் பாடு!

என்
கணங்களின் யுகங்களை
கனவுத் தூளியில்
தூங்கச் செய்த
அந்தத் தாலாட்டை
இன்றும் பாடு!

வாரணம் ஆயிரம் சூழ
இந்திரன் போலொரு
ராஜகுமாரன் வந்தென்
கைத்தலம் பற்றுவான்

வைரமணி மாலைகள் வீழ
முத்துப்பந்தலின் கீழ்
என் திருமணம் நிகழும்

கைகள் சிவக்க
தந்தையும் தமையனும்
வரிசைகள் வழங்க
ஊர் மக்கள் வாழ்த்தொலி
விண்ணைப் பிளக்கும்.

என் தாலிக்குச் சீர் சேர்க்க
வெள்ளி மணி
பூட்டிய வண்டியில்
வண்டி நிறைய சீர்களோடு
தாய் மாமன் வருவான்

என் குழந்தைக்குத்
தங்கத்தில்
தொட்டில் தருவான்
என்றெல்லாம் பாடினாயே...

உன் பாட்டில் கேட்டதைப் போல்
இந்தப் பிரபஞ்சத்தில் எங்கும்
நான் கண்டதில்லையே அம்மா...

அந்தப் பிஞ்சு வயதில்
என் கண்களுக்கு
கனவுகளை மட்டுமே
சொல்லிக் கொடுத்து விட்டாயே!

இன்று—
முதிர் கன்னி என்கிறார்கள்.
கண்ணீர் கோடுகள்
சிறைக் கம்பிகளாகி விட்டன.
உடலைப் போலவே
உள்ளமும் சோர்ந்துவிட்டது.

அம்மா—
அன்று பாடிய தாலாட்டை
இன்றும் பாடு!

ஆனால்—
இன்னொரு தலைமுறையை
கனவுகளிலேயே
காலம் தள்ள விடாமல்
நீ வாழ்ந்ததைப் பாடு!
யதார்த்த வாழ்க்கையைப் பாடு!

காவ்யாவின் பிற கவிதை நூல்கள்:

நைலான் ரதங்கள், சுஜாதா	...	12.00
நீயும் நீயும் நானும் நானும், பாலா	...	12.00
முதல் மின்னல், மணி	...	7.00
விடியும் வரைதான், காவியன்	...	10.00
புத்தகத்திலிருந்து புறப்பட்ட பிரதிமைகள் – ப்ரதிபா ஜெயச்சந்திரன்	...	6.00
கறுப்பு யுத்தம், இரா. நடராசன்	...	15.00
யுத்த காண்டம், முல்லை அமுதன்	...	8.00
கலாப்ரியா கவிதைகள், கலாப்ரியா	...	50.00

89985
15-7-98